கிடைக்கின்ற நேரத்தில் அதை நிறைவேற்றிக் கொடுப்பதாகவும் பதில் அளித்தார்கள். இப்பொழுது அந்தத் திட்டம் எந்த வகையில் நிறைவேற்றப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திட்டம் இருக்கிறது. தற்பொழுது சாத்தியம் இல்லையென்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர திட்டம் கைவிடப்பட்டதாக இல்லை.

பாலாறு-பொருந்தலாறு திட்டம்

* 212 வினா.—**திரு. கு. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டத்தில் பாலாறு, பொருந்தலாறு திட்டம் எந்நிலையில் உள்ளது ?

(இ) அதைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இத்திட்டத்திற்கான விவரங்கள் மத்திய நீர், மின்விசை குழுவிற்கு, ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளன.

(இ) மத்திய நீர் மின்விசைக் குழுவின் ஒப்புதல் கிடைத்ததும் இத்திட்டம் மேற்கொள்ளப்படும்.

திரு. கு. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு செலவு எவ்வளவு ஆகிறது ? இதனால் புதிதாக எவ்வளவு ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டத்திற்கு 2.56 இலட்சம் ரூபாய் செலவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. தற்போது சுமார் 10,000 ஏக்கருக்கும் புதிதாக சுமார் 4,000 ஏக்கருக்கும் பாசன வசதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

திருமலைநாயக்கர் மஹால்

* 213 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி :**
திரு. கே. விநாயகம் :
திரு. டி. மார்டின் :
திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை திருமலைநாயக்கர் மஹாலை புதுப்பிக்க செலவு செய்யப்பட்டதா ?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) திருமலை நாயக்கர் மஹாலைப் புதுப்பிக்க 1966-67-ல் 3 லட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவுத் தொகை அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதுவரை ரூபாய் 1,020 செலவு செய்யப்பட்டுள்ளது.

(இ) மஹாலில் செயலுறும் நீதி மன்றங்கள், மதுரை செங்குளம் ஏரிப்படுகையில் கட்டப்படுகின்ற இணைந்த நீதி மன்றங்கள் இல்லத்திற்கு மாற்றுதல் செய்யப்பட்ட பின்பு மராமத்துப் பணிகள் துவங்கப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி : சார், கிட்டத்தட்ட ரூ. 3 இலட்சத்துக்கு மேலே பணம் ஒதுக்கியும் இதுவரையிலே எதுவுமே செலவு செய்யப்படவில்லை. சமீபத்திலே கூட, சில பகுதிகள் இடிந்து விழுந்து உயிருக்கே ஆபத்து ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. திருமலை நாயக்கர் மஹால் என்பது சிறந்த கட்டடம். இரும்போ, மரக் கட்டையோ இல்லாமல் கட்டப்பட்ட கட்டடம். ஆகவே அதை தேசிய சின்னமாக ஆக்குவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்பொழுது அக் கட்டடத்திலுள்ள அலுவலகங்களை மாற்றிய பிறகு மராமத்து வேலைகளை மேற்கொள்ள வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. புதிதாகக் கட்டடம் கட்டுகிற வேலையும் நடைபெற்று வருகிறது. இந்தத் திருமலை நாயக்கர் மஹால் புதுப்பிக்கப்பட ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட ரூ. 3 இலட்சம் செலவிடப்படும்.

Thiru K. VINAYAKAM : Sir, whereas the Tirumalainaicken Palace is a famous and historical heritage given to our country and whereas a lot of Government Offices like Sub-Magistrate Courts and District Magistrate Courts are located inside the Mahal with the result that it is subject to wear and tear and now it is in a dilapidated condition, will the Government not only renovate it but also provide alternative accommodation for the officer there?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மதுரை திருமலை நாயக்கர் மஹாலில் இருக்கிற கோர்ட் போன்ற அலுவலகங்களுக்கு ஏற்கனவே இடத்தைத் தேர்ந்தெடுத்து கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன. வேலைகள் முடிகின்ற தருவாயில் இருக்கின்றன.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, திருமலை நாயக்கர் மஹாலில் கோர்ட்டு நடந்து கொண்டிருந்த நேரத்தில் மேல் கட்டடம் இடிந்து விழுந்து அங்கு உயிர் சேதம் ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டது. இதற்காகப் புதிய கட்டடமும் கட்டியிருக்கிறார்கள். ஆனால் அந்தப் புதிய கட்டடத்தில் 1969 ஜனவரித் திங்களிலேயே கோர்ட்டு அலுவலகங்கள் மாற்றப்படும் என்ற ஒரு முறை இருந்தது. ஆனால் இன்று செப்டம்பர் ஆகியும் கோர்ட் அலுவலகங்கள் திருமலை நாயக்கர் மஹாலிலேயே இருக்கிற காரணத்தால் அங்கு வரக்கூடிய வழக்கறிஞர்களும் பொதுமக்களும் மிகவும் பயத்தோடு வந்து போகக்கூடிய நிலை இருக்கிற காரணத்தால் உடனடியாக அந்தப் புதிய கட்டடத்தைக் கட்டி முடித்து, இந்தக் கோர்ட்டு அலுவலகத்தை அங்கு மாற்ற அரசு முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

1969 செப்டம்பர் 11]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மதுரை திருமலை நாயக்கர் மஹாலில் வழக்கறிஞர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதுவரை எந்த ஆபத்தும் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. ஆனாலும் புதிதாக அமைக்கப்படுகிற கட்டடங்கள் விரைவாக அமைக்கப் பட்டு, அங்கு இவ்வலுவலகங்களை மாற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, பழந்தமிழர் நாகரிகத்திற்கும், கலைக்கும், பண்பாட்டிற்கும், கட்டடக் கலைக்கும் சான்றாகவும், இன்றைய பொறி இயல் துறைக்குச் சவாலாகவும் விளங்குகின்ற திருமலை நாயக்கர் மஹாலை மேலும் அழகுபடுத்தி, பழந்தமிழர் சிறப்பினை விளக்கும் தொல் பொருள் அடங்கிய மியூசியம் ஒன்றையும், பாலர் அரங்கம் ஒன்றையும் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பழந்தமிழர் நாகரீகம், கலை, பண்பாடு இவைகளின் மேல் கனம் உறுப்பினர் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஆர்வத்தை மனமாரப் பாராட்டு கிறேன்.

சென்னை மாநகராட்சி

*** 214 வின.—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி பொது மக்களிடமிருந்து ஒரு கோடி ரூபாய் கடன் திரட்ட முடிவு செய்துள்ளதா ?

(இ) ஆம் எனில், என்னென்ன பணிகளுக்காகக் கடன் திரட்டப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) என்னென்ன பணிகளுக்காக இந்தக் கடன் பணத்தை உபயோகப்படுத்துவது என்பதைப்பற்றி இன்னும் முடிவு செய்யப் படவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்தக் கடன் பொது மக்களிட மிருந்து 6¾ சதவீதம் வட்டிக்கு வாங்கப்பட்டது. எந்தப் பணிக்கு செலவழிக்கப்பட வேண்டும் என்று முடிவு எடுக்கப்படாததால் இந்தப் பணம் வங்கியில் 4½ சதவீதம் வட்டிக்குப் போடப் பட்டிருக்கிறது. அதனால் வருஷம் ஒன்றுக்கு ரூ. 6 லட்சம் வட்டிக்காக கொடுக்க வேண்டியிருக்கிறது. எந்தத் திட்டத்தையும் பரிசீலனை செய்து முடிவு செய்யாமல் கடனை எழுப்பி காலதாமதம் ஆவதற்குப் பதிலாக, திட்டத்தைப் பரிசீலனை செய்து முடிவு செய்ததற்குப் பின்னால் கடன் தொகையை வசூல் செய்வதற்கு இனியாகிலும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? ந. ப. 12-00